# விடியல்

## The Dawn


இதழ்-10, பிப்ரவரி-2015

தனிச்சுற்றுக்கு மட்டும்



கௌரவ ஆசிரியர்

முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு

முனைவர்.பெ.கணேசமுருகன்
துறைத்தலைவர்

ஆசிரியர் குழு

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு

முனைவர்சி.ஆர்.சுரேஷ்  முனைவர் த.சுந்தரராஜ்
திரு. செ.தங்கராஜ்  திரு. மு. சதீஸ்குமார்



வெளியீடு:

**தமிழ்த்துறை**

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## தலையங்கம்

பிப்ரவரி 21 உலக தாய்மொழி தினம். 1999-யுனெஸ்கோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி தாய்மொழி தினம் வருடா வருடம் உலகம் முழுக்க கொண்டாடப்பட்டு வருகிறது. மொழியெல்லாம் ஒரு சிக்கலா என்று இன்றைக்கு பலபேர் கேட்கலாம். ஆனால்,மொழி தேசங்களை கூறுபோடும் வல்லமை படைத்தது என்பதே உண்மை. மதத்தை அடிப்படையாக கொண்டு பாகிஸ்தான் என்கிற தேசத்தை உருவாக்கினார்கள். ஆனால், மிகக் குறைவான மக்கள் பேசிய உருதுவை மட்டும் தேசிய மொழியாக அறிவித்துவிட்டு வங்க மொழியை புறக்கணித்தார்கள் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள். அதை எதிர்த்து இதே தினத்தில் போராடிய எண்ணற்ற கல்லூரி மாணவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். பின்னர் மொழிசார்ந்த சிக்கல் தனி வங்கதேசத்துக்கே வழிவகுத்தது.

தாய்மொழி என்பது வெறும் கருவி இல்லை;ஒரு இனத்தின் பண்பாடு, கலாசாரம்,வாழ்க்கைமுறை, சிந்தனை எல்லாவற்றிலும் முக்கிய பங்காற்றும், நீங்காத அங்கமாக இருக்கும் சிறப்பு அன்னை, மொழிக்கு உண்டு. அன்னை மொழியை பிழையற பேசவும் எழுதவும் தெரியாமல் இளைய சமுதாயத்தை வளர்த்து விடுகிறோம் என்பது வருத்தமான நிகழ்வு.

அன்னை மொழியை புறக்கணித்து பிள்ளைகளின் இயல்பான சிந்தனையை சிதைக்கிறோம் என எச்சரிக்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். அறிவியலில் அதிகபட்ச நோபல் பரிசை பெற்றவர்கள் எல்லாம் தங்களின் தாய்மொழியில் பயின்றவர்களே.

# உள்ளடக்கம்


**கவிதை**....................4-15

- அன்பு
- எழுவாய் தமிழா
- படியில் பயணம்
- மனம்
- முடிவில்லா நட்பு
- வெற்றிப்பரிசு
- அம்மா
- கார்கால மாலை
- அன்புத்தாயே
- தத்துக்குழந்தை
- வாழக்கை
- நாணயம்
- நல்ல நண்பனே!
- பள்ளிப்பருவம்
- காலணி
- கேள்வி
- அன்னை
- சாதி
- வெற்றி
- அன்பு வாழக்கை
- நட்பு
- காலைமாலை
- உன்னை விட நான் அழகில்லை
- ஆசை
- என் ஆசிரியருக்கு நன்றி
- தமிழனே தலை நிமிர்
- நட்பின் புத்தகம்
- விடுதி நட்பு
- கல்வி
- கண்ணீர்
- விழித்திடு தோழா
- நல்ல நட்பு
- என் அன்னை
- மரம் வளர்ப்போம்
- வானவில்
- நம்பிக்கை
- சிட்டுக்குருவி
- வாழ்க்கை
- நட்பு
- நண்பனின் பெருமை
- அம்மா
- கனவு
- அவள் பெயர்
- அப்பா

**சிறுகதை**..............16-17

- காலம் யாருக்காகவும் காத்திருக்காது
- பெருமைக்குக் கிடைத்தப் பரிசு
- நீதி

**கட்டுரை**..................17-18

- சாதாரண கணினியை தொடுதிரை கணினியாக்க

**பொது அறிவு**...........18-26

- International Day of the February
- மாசிமாதச் சிறப்புகள்
- விலங்குகளின் கருவளர்ச்சி நாட்கள்
- Blood Group = Person's Qualities
- புகழ் பெற்ற குழந்தைகள்
- பழந்தமிழர் விளையாட்டுக்கள்
- தமிழ்நாட்டு ஊர்களும் சிறப்புகளும்
- சின்னச்சின்ன கேள்விகள்
- தேசத்தலைவர் சமாதியின் பெயர்கள்
- இந்திய மாநில விலங்குகள்
- பொன்மொழிகள்
- நகைச்சுவைகள்
- விடுகதைகள்
- மருத்துவக்குறிப்பு
- பொன்மொழிகள்

**ஒளிநிழல் படம்**............27

- ☯ கவிபாடும் காட்சிகள்

**ஓவியம்**................28-32

# கவிதைகள்

## அன்பு

காதலி என்பவள்
கல்லூரியில் வருபவள்
காதல் என்பது
அம்மாவின் கருவறையில்
வருவது!!!

**செ.பாபு**

ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## எழுவாய் தமிழா!

செம்மொழியினைத் தம் மொழியாகக்
கொண்ட தமிழா!
உன் நாட்டில் பன் மொழிகளுண்டு
உன் மொழி இல்லை!
தமிழ் பேசுவதை இழிவெனக் கருதி
உன் தலைமுறையை
இழிவு படுத்துகிறாயே!
தமிழைப் பேசுவது இழிவல்ல
தவறாகப் பேசுவதே இழிவு
தமிழை மொழியாகப் பார்க்காதே;
உன் தாயாகப் பார்!
உன் தாயைப் பழித்தால் பொங்கும் நீ
உன் தாய் மொழியைப் பழித்தால்
ஏன் பொறுமை காக்கின்றாய்
உணவை இழந்தாலும்
தமிழ் உணர்வை
இழக்காதே!
தமிழை ஒருவன் தாழ்த்தினால்
தலையை எடுக்கவும் தயங்கதே!
பொங்கி எழு என் தமிழனே
என்றும் வெற்றி உனது
தோழனே!

## படியில் பயணம்

படியில் தொங்கும் வாலிபனே!
உன்னை ஈன்ற
பத்தினியை ஏன் மறந்தாய்!
ஐந்து நிமிடப் பயணத்திற்கு
உன் ஆயுளை ஏன் தியாகம் செய்தாய்
உன்னைப் பெற்ற தாய்க்கு
உன் பரிசு கண்ணீர் தானா?
ஏ வாலிபனே...
நினைவில்கொள்!
நீ படியை விட்டால் செல்வாய்
சற்று பேருந்தின் உள்ளே
படி உன்னை விட்டால் செல்வாய்
சவப்பெட்டியின் உள்ளே
படியில் செல்ல விரும்பி
உன் வாழ்வின்
விடியலை நிறுத்தி விடாதே!
படியில் காட்டும் ஆர்வத்தை
சற்று படிப்பில் காட்டிப்பார்!
கல்வி எனும் ஜோதியை நீ ஏற்று
உலக அரங்கில்
முழங்கும் உன் கூற்று
படியை விட்டு படிப்பை எடு
வாழ்வில் விண்ணைத்தொடும் அளவிற்கு
வெற்றி உனக்கே!!

## மனம்

வாழ்வில் நீ எடுக்கும் முடிவினை
மற்றவரிடம் கேட்காதே!
உன் மனதிடம் கேள்
மனதிடம் இருந்தே
திடமான முடிவு பிறக்கும்!

**இர.சாயிசங்கித்ராஜ்**
இயற்பியல் துறை இரண்டாமாண்டு

## முடிவில்லா நட்பு

நூலகத்தில் - நான்
கண்ட புத்தகம் நீ...
சில புத்தகங்கள்
முடிவு பெற்றாலும்
நீ மட்டும் தொடர்கதையாய்
என் மனதில்...

**ஆர்.கார்த்திகா**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## வெற்றிப் பரிசு

கல்லூரி என்ற மெழுகை
வைத்து – அதில்
படிப்பு என்ற தீயை
வைத்தால் - அது
முயற்சி என்ற மெழுகாய்
உருகி – ஓர்
உருவம் தோன்றுகின்றது!
அந்த உருவம்தான்
நம் வெற்றி – அதில்
வாழ்க்கை என்ற
ஓர் அழகான வெளிச்சம்
உண்டாகிறது!!

**ப.விஸ்வநாதன்**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## அம்மா

உயிர் எழுத்தில் “அ” எடுத்து
மெய் எழுத்தில் “ம்” எடுத்து
உயிர்மெய் எழுத்தில் “மா” எடுத்து
அழகு தமிழில்
கோர்த்தெடுத்த முத்து
அம்மா!

**முகமது வாசிப்**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## கார்கால மாலை

வீட்டைச்சுற்றிக் கூரைத்தண்ணி
வரிசையாய் பொட்டு வைக்கையில்
மழை ஓய்ந்திருக்கும்.

மெழுகிய வாசலை மோதி
ஈரப் படம் வரைந்து
உருகியோடும் தெருத்தண்ணி.

முதல் மழையில்
மண்வாசம்
மரங்களோடு எழுந்து நிற்கும்.

வேப்பிலையில் தேங்கியிருக்கும்
மழைத்தண்ணி
யாரிடமாவது வம்பிழுத்து
விளையாடவைக்கும்.

மாலைக்கதிரவன் மறைந்த பிறகு
மீண்டும் தொடரும் புதுமழை
பனங்கூரையில் விழுந்து இசையாகும்
தவளைச்சத்தமும் கூட்டுச்சேர
சாணித்தரையின் கதகதப்பில்
அவை இரவுத்தாலாட்டாகின்றன.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.

## அன்புத்தாயே!

மறு பிறவி இருந்தால்
செருப்பாக பிறக்க
வேண்டும்.
என் அம்மா
காலில் மிதிபட அல்ல
அவளை ஒரு முறை
நான் சுமப்பதற்காக!!

**நவநீதகிருஸ்ணன்**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## தத்துக்குழந்தை

உன்னை வயிற்றில்
சுமக்கும் பாக்கியம்
எனக்கு இல்லை – ஆகையால்
என் நெஞ்சில் சுமந்து
தீர்த்துக் கொள்கிறேன்...!

**டி.ஹரிகரன்**
கணினி அறிவியல் அ்பிரிவு முதலாமாண்டு

## வாழ்க்கை

வாழ்க்கையே போட்டிதான் -அதில்
இறுதிவரை முயற்சிக்க வேண்டும்
படிக்கும் போது நாளை என்று
கூறாதே!
இன்றைய நாள்தான் உனக்காக
முயன்றுபார் –அது
வெற்றியின் படிக்கட்டுகள்!

**எஸ்.ஹேமலதா**
கணினி அறிவியல் அ்பிரிவு முதலாமாண்டு

## நாணயம்

நீண்ட வரிசை
மணி நேரக் காத்திருப்பு
கடவுளைச் சந்தித்து
கோரிக்கைகளை
பட்டியலிட்டேன்...
உண்டு இல்லையென்று
எந்தப் பதிலும்
அவர் சொல்லவில்லை
திரும்பும் வழியில்
ஒற்றை நாணயத்தை
தட்டிலிட்ட அடுத்த கணம்
நீ கேட்டதெல்லாம்
கிடைக்கும் என்றான்
பார்வையற்ற பிச்சைக்காரன்...!

**அ.மதன்ராஜ்**
கணினி அறிவியல் அ்பிரிவு முதலாமாண்டு

## நல்ல நண்பனே!

நான் வாழ நித்தம் வேண்டும்
இதயம் படைத்தவன் என் நண்பன்
என் துயர் துடைக்க அனுதினமும்
பாடுபடுபவன் என் நண்பன்
காலிழந்த நான் செயல்பட
காலாய் இருப்பவன் என் நண்பன்
முயற்சியால் அவன் பெற்ற வெற்றியை
எனக்காய் விட்டுக் கொடுப்பவன் என் நண்பன்
அறியாமையால் நான் செய்யும் தவறை
அன்பாய் திருத்துபவன் என் நண்பன்
ஆண்டவன் அருளுடன் நான் வாழ
எனக்கு கிடைத்த பொக்கிஷம்
என் நண்பன்....!

**கு.கவிபிரியா**
பி.சி.எ முதலாமாண்டு

## பள்ளிப்பருவம்

அம்மாவின் கையைவிட்ட போது
பிடிக்காமல் அழுத தருணம்
பிஞ்சு நண்பர்களிடம் புதிதாய்
வாங்கிய பேனாவை காண்பித்த
தருணம்...
லேசாக மழை வந்தால் பள்ளிக்கு
விடுமுறை விட்ட
சந்தோஷத் தருணம்..
பிறந்த நாள் அன்று மட்டும்
பள்ளிக்கு உன்பே செல்ல
துடித்த தருணம்..
நண்பர்களின் விதவிதமான
மதிய உணவை பரிமாறிக்
கொண்ட தருணம்..
வகுப்பறையில் பாடம் சொல்லிக்
கொடுக்கும் வேளையில்
நண்பனிடம் பேசிய தருணம்..
இனி எப்போது கிடைக்கு
இந்த பள்ளிபருவம்!!

**க.பிரியா**
கணினிதுறை முதலாமாண்டு

## காலணி

நம்மை பாதுகாப்பதால் நமது தோழன்!
நமது காலினை தாங்குவதால் தாய்!
வெளியே நாம் விட்டு விடுவதால்
நமது எதிரி!
எண்ணற்ற வண்ணங்களில் இருப்பதால்
பூக்கள்!
முள்களிலிருந்து பாதுகாப்பதால் தந்தை!
கோயிலுள் செல்லாத
ஒரு உன்னத பக்தன்!
துறவிகள் அணியாததால்
பாவத்தின் சின்னம்!

**மை.மகிளா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## கேள்வி

குழந்தைக் கேட்பது
கேள்விகள் அல்ல!
புது புது கண்டுபிடிப்புகள்;
ஒரு நாளாவது நாம்
நினைத்திருப்போமா?

நாம் ஏன் இந்த வயதில்
பிறந்தோம் என்று!

**சா.மகிஷா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அன்னை

நான் பார்த்த முதல்
சுமைதாங்கி நீ! – என்னை
கருவறையில் சுமந்தாயே!
நான் பார்த்த முதல் தியாகி நீ!
உன் ரத்தத்தை பாலாக்கிக்
கொடுத்தாயே!
நான் பார்த்த முதல் வெகுளி நீ!
எனக்காக தினமும் கை நீட்டி
அழைத்தாயே!
நான் பார்த்த முதல் தோழி நீ!
என் தவறுக்காக
தந்தையிடம் பலமுறை
பணிந்தாயே!
நான் பார்த்த முதல் வள்ளல் நீ!
உன் பசி பாராது
என் பசி தீர்த்தாயே!
நான் பார்த்த முதல் ஆசான் நீ!
உன் அனுபவ அறிவைக்
கற்றுக்கொடுத்தாயே!
நான் பார்த்த முதல் கடவுள் நீ!
எனக்காக வாழும் நீயின்றி
யார் தாயே!
உனக்காக தரவேண்டும்
அவன் உன் மகனா – என்று
மற்றவர் புகழும்
மகுடத்தை...!

**ச.சுகுமார்**
கணினி அறிவியல் அ'பிரிவு முதலாமாண்டு

## சாதி

ஆண்டவன் இவனை உருவாக்க
இவன் ஒரு எமனை
உருவாகினான்!
இறுதியில் அது அனைவரையும்
கொன்று கொண்டிருக்கிறது!
இன்யாவது சாதி, மதத்தை நம்புவதை
மக்களாகிய நாம் நிறுத்துவோமா?

**எஸ்.மலர்விழி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## வெற்றி

அமாவாசை அன்று பார்த்தால்
அனைத்துமே இருட்டாகத்தான் தெரியும்!
முடியாது என்று ஒதுங்கிவிட்டால்
எதுவுமே நம்மால் முடியாது!
நாம் என்று காண்பது வெற்றியை!
தோல்வியின் படிகளில்
ஏறிச்செல்லுங்கள்
அப்போதுதான் வெற்றியின்
வாயிலை அடைய முடியும்!

**ம.சௌந்தர்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அன்பு

சிலருக்குக் காட்டத்
தெரியவில்லை!

சிலருக்குக் காட்டுவது
தெரியவில்லை!
பலருக்குக் காட்டுவது
தெரியவில்லை!

**பி.எஸ்.பூபதிராஜா**
முதலாமாண்டு வணிகவியல்

## வாழ்க்கை

கிளைகள் மட்டும் பசுமையாகாது
மேகங்கள் மட்டும் வானமாகாது
வரிகள் மட்டும் கவிதையாகாது
தோல்விகள் என்றும் நிலையாகாது
சோகங்களை முயற்சியாக்கு!
முயற்சியை வாழ்க்கையாக்கு!
வாழ்க்கையை வெற்றியாக்கு!!!

**ஜெ.புவனேஸ்வரி**
முதலாமாண்டு வணிகவியல்

## நட்பு

சொந்த பந்தங்கள்
பருவகக் காலங்களைப் போன்றது
அந்தந்தக் காலங்களில் மாறும்.
நம் நண்பர்கள் மீது
நாம் கொண்ட நட்பு
நம் பூமியைப் போல
என்றும் மாறாது!

**எஸ்.கணேசன்**
முதலாமாண்டு வணிகவியல் துறை

## காலை மாலை

மாலை நேரம்
கதிரவனை மறைத்த கர்வத்தில்
கருமேகங்கள்!
கடமை முடிந்த மகிழ்ச்சியில்
கதிரவன்!
காலை நேரம்
இருளை விரட்டிய கர்வத்தில்
கதிரவன்!
ஓடி ஒழிந்த சோகத்தில்
விண்மீன்கள்!
அதை கண்டுபிடிக்கத் துரத்தும்
பறவை!

**ஜெ.ஞானபிரகாஸ்**
உயிர்த்தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

## உன்னை விட நான் அழகில்லை....?

கார்மேகமும்
கருமை நிற – உன்
கூந்தலைக் கண்டு
காரணமில்லாமல்
களைந்து போகும்...!
சுட்டெரிக்கும் சூரியனும்
சுட்டுவிழி – உன்
பார்வையை கண்டு
சுருண்டு சுருண்டு குளிர்த்து போகும்!
வெட்டவெளி வெண்ணிலவும்
வெகுளி தனமுள்ள – உன்
அழகை கண்டு வெளுத்து போகும்...!

ஏழு வண்ணம் பூசிய வானவிலும்
ஒரு வர்ணம் உள்ள – உன்
புருவத்தைக் கண்டு
தனித்தனியே பிரிந்து போகும்..!
பறந்து திரிந்து பட்டாம் பூச்சியும்
திறந்து மூடும் - உன்
இமையைக் கண்டு திசை
தெரியாமல் தொலைந்து போகும்...!
பூத்துக் குலுங்கும் பூக்களும்
புதிதாய் பூத்த – உன்
புன்னகையைக் கண்டு
ஏகிறி குதித்து
புதைந்து போகும்..!
விஸ்வரூபம் எடுக்கும் புயலும்
மௌனங்கள் வெடுக்கும் - உன்
வார்த்தையைக் கண்டு
மெதுவாய்
அடங்கிப் போகும்..!
படர்ந்து விரிந்த புல்வெளியும்
நடந்து சென்ற – உன்
பாத சுவற்றை கண்டு
சட்டென்று பட்டுப் போகும்...!

**சே.நந்தினிதேவி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## ஆசை

புன்னகையாய் சிரிக்கும்
மழலைப் போல்
மாற ஆசை!
சுதந்திரமாய் பறக்கும்
பறவை போல்
பறக்க ஆசை!
இயற்கையோடு இணைந்து
வாழ ஆசை!
முடிந்தால் தாயின் கருவறையில்
மறுபடியும் உறங்க ஆசை!
ஆசையும் நட்சத்திரம் போல்தான்
கைவிட்டு எண்ண முடிவதில்லை...!

**அ.சந்தோஷினி**
ஆங்கிலத்துறை முதலாமாண்டு

## என் ஆசிரியர்களுக்கு நன்றி!

கை எடுத்து வணங்குகின்றேன்
நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்
நான் வாழ முன்னேற
எனக்காக உழைத்தவர்கள்!
நாங்கள் தேர்வு எழுத
நீங்கள் வழிகாட்டினீர்கள்!
நாங்கள் வெற்றி பெற
கடினமாக உழைத்தீர்கள்!
உங்கள் சேவையை என்றும்
மறவோம்.
வாழ்க! வளர்க! ஆசிரியப் பணியாம்
அறப்பணி! - என்றும்
நன்றி கூற மறவோம்..!

**ரா.மணிஷா**
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

## தமிழனே தலை நிமிர்

முயலாமல் கிடைத்தால் -அது
வெற்றி அல்ல!
மனிதா!
உன் பாதையில் கல்லாகவும்
முள்ளாகவும் இருக்கும்

கஸ்டத்தையும்!
உன் வாழ்வில்
மலையாகவும் கடலாகவும்
உள்ள தடைகளையும்!
தகர்த்தெறிந்து பெறுவதே
உண்மையான வெற்றி!
நூலகத்தைக் கோயிலாகப் பார்!
புத்தகங்களை தீபங்களாகப் பார்!
உன்னைப் பற்றி அறிய
உலகத்திடம் செல்!
உனக்குள் இருக்கும்
உன் தந்தையை
சான்றோரினும் மேலாகப் பார்!
பக்கத்து வீட்டு ஆடம்பரத்தைக் கண்டு
மெய்சிலிர்த்து ஏமாறாதே!
ஆடம்பரம் ஒரு சருக்கு மரம் -அதில்
ஏறி வழுக்கி விழாதே!
உன்னைக் கருவில் சுமந்த
உன் தாய்க்கு
உன் இதயத்தைக் கூட கொடு!
அவளை நிராகரித்து விடாதே!
பகைவனையும் நேசிக்கக்
கற்றுக்கொள்!
அவனே உன் வெற்றிக்கு
உண்மையான காரணம்!
சிந்தித்து வாழக் கற்றுக்கொள்!
படிப்பை எடு
படைப்பைக் கொடு!
உன்னை பட்டினி
போட்டவனுக்குக் கூட
உணவினைக் கொடு!
உயிரே போகும் நிலை
ஏற்பட்டால் கூட
உன் தைரியம் போகும்
நிலை ஏற்படக் கூடாது!
கடவுளிடம் அதிக செல்வத்தைக்
கேட்பதை விட
அதைக் காட்டிலும் அதிகமான
தன்னம்பிக்கையைக் கேள்! –அதுவே
உன்னுடைய உண்மையான
ஆயதம்...!

**வா.கௌரிசங்கர்**
இயற்பியல்துறை இரண்டாமாண்டு

## நட்பின் புத்தகம்

நண்பா!
நம் நட்பு என்னும் புத்தகத்தை
கடற்கரையில் வைத்தேன்
அலைகள் அதை அடித்துச்
செல்லவில்லை
படித்துச் சென்றன...!

**வி,கௌதம்**
கணினி அறிவியல் அ்பிரிவு முதலாமாண்டு

## விடுதி நட்பு

தனித்தனிப் பட்டுப் பூச்சியிலிருந்து
தனித்தனி பட்டு நூல்களாய் வந்து
ஒரே பட்டுப் புடவையாய்
வாழ்கிறோம்
நம் கல்லூரி
விடுதியில்.

## கல்வி

படிப்பு என்னும்
படியில்
ஏறினால்தான்
மதிப்பு என்னும்
மாளிகையை
அடைய முடியும்.

**ஜெ.ஸ்வாதி**
கணினி அறிவியல் முதலாமாண்டு–சி பிரிவு

## கண்ணீர்

சிலருக்கு பனித்துளி பிடிக்கும்...!
சிலருக்கு மழைத்துளி பிடிக்கும்...!
யாரையாவது உண்மையாக
நேசித்துப்பார் – அவர்களின்
கண்ணீர்த்துளி கூட மிகவும் பிடிக்கும்...!

**எஸ்.கௌசல்யா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## விழித்திடு தோழா
### (ஒரு கவிஞனின் படைப்பு)

மொட்டுக்கள் இதழ்விரித்து
மதுவடித்து சுவை கொடுத்து
தேன் சிட்டுக்களை வரவேற்கும்!
அதிகாலை பொழுதை
ஆனந்தமாய் ரசித்துப்பார்
வாழ்க்கையும் இனிக்கும் - உன்
வெறுங்கையும் சுவைக்கும்!
அறுபதே ஆண்டுகாலம்
அதன் பிறகு ஆயுள் போதும்
அது வரை வாழ்ந்திடு தோழா!
அறிவுரை சொல்வதில்லை உனக்கு
வரிப்புலியென்ன தனக்கு
தானாகவா கோடு போட்டுக் கொள்கிறது
தாயக்காரமென்ன
தானாகவா சுற்றுகிறது!
காதல் கவியெழுதவும்
காதலியை காதலிக்கவுமாய்
பிறப்பெடுத்தாய்?
பழங்களைப் பறித்துசுவைக்க
எத்தனையோ வழிமுறைகள்
கல்கொண்டும் வில்கொண்டும்
உதிர்க்கலாம்
மரத்தின் உச்சிக்கு
நீ சென்றால் மரம் முழுவதுமே
உன் காலுக்கடியில்!
உயர்ந்த சுவரெழுப்பினால்
கடலலை கூட திரும்பி போகும்
அக்கடலைச் சுற்றி – நீ
வேலி போட்டால்
அக்கடல் கூட உனக்கு
சின்ன ஏரியாகும்!
புரிந்துக்கொள் தோழனே
புதுமை கூட போதைதான்
நீயதை உணர்வதால் மட்டுமே!
உறங்கிவிடு உறக்கத்தில்
எதையேன்ய்ம் படைத்துவிடு
எழுந்துவிடு எழுத்தில்
எதையேனும் புகுத்திவிடு
எல்லாமுமாய் ஆகிவிடு
எதுவுல்லாமல் பதறாதே
எழுந்துவிடு நண்பா

பயமாய்...பிறருக்கும் பயமாய்...!!

**கா.முகமத் சுஹேல்**
இரண்டாமாண்டு உயிரித்தொழில் நுட்பவியல்
ஆ-பிரிவு

## நல்ல நட்பு

காற்றுக்கு இலைகள் மீது நட்பு!
மேகத்திற்கு மழை மீது நட்பு!
செடிக்கு பூக்கள் மீது நட்பு!
கடலுக்கு அலைகள் மீது நட்பு!
வண்டுக்கு தேனின் மீது நட்பு!
ஆசிரியருக்கு புத்தகம் மீது நட்பு!
பேனாவிற்கு எழுத்தின் மீது நட்பு!
அம்பிற்கு வில்லின் மீது நட்பு!
தாய்க்கு மகள் மீது நட்பு!
எனக்கு என் அன்பு
தோழி மீது நட்பு!!

**சே.புவனேஸ்வரி**
தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு

## என் அன்னை

அன்னை எனும் பெயர்பெற்று
அன்பெனும் மடிகொண்டாய் நீ!
முல்லை விதை என
முடிந்துக்கொண்டாய் என்னை
நன்நீர் ஊற்றி மலர
பிள்ளை! பிள்ளை! என தழுவி.
அன்பெனும் பொருள்
பண்பெனும் குணம்
பாசமெனும் உறவு -இவைக் கழிய
நல்லொழுக்கம் எனும் கல்வி
நாள்தோறும் நல் உணவு எனப் பெற்று
உன் கை பிடித்து
உயர்ந்தவன் நான்
நாளை உன் பிரிவைக் கண்டு
வருந்த மாட்டேன்
உன் வரவை எதிர்பார்ப்பேன்
என் மகளாய்...

**சு.ரமணி**
ஆங்கிலத்துறை மூன்றாமாண்டு

## மரம் வளர்ப்போம்

மரம் ஒன்று வளர்ப்போம்
பயன் பல பெறுவோம்
தெருவோரம் நட்ட மரம் -அது
இதமான நிழல் தரும்
தந்தை நட்ட தென்னை மரம்
தரும் இளநீர் சுகம் தரும்
காட்டில் வளரும் சந்தனமரம்
நாட்டிற்கு பல வளம் தரும்
நட்ட மரத்தை வெட்டுவது
நாம் செய்யும் துரோகம்..!

**கு.கவிபிரியா**
பி.சி.எ முதலாமாண்டு

## வானவில

ஏழு வண்ண ஓவியமே!
உன்னை வரைந்த ஓவியன் யார்?
ஏழு வண்ணச் சேலையே!
உன்னை நெய்த நெசவாளி யார்?
ஏழு வண்ண விற்களே!
உன்னை படைத்த பாட்டாளி யார்?

ஏழு வண்ணச் சிற்பியே!
உன்னை செதுக்கிய சிற்பி யார்?
உன்னை அறியத் தேவைப்படுமோ!
எனக்கு ஏழாம் அறிவு..!

**எம்.சேதுபதி**
பி.சி.எ முதலாமாண்டு

## நம்பிக்கை

நண்பா…
தோல்வி – வெற்றிக்கான படி
ஏறிக்கொண்டே இரு.
வறுமை – வளைமைக்கான வழி
நடந்துக் கொண்டே இரு.
தன்னம்பிக்கை – தாகம் தீர்க்கும் வழி
அருந்திக்கொண்டே இரு.
சோம்பல் - சாதனையை சாம்பலாக்கும்
துரத்திக்கொண்டே இரு.
நம்பிக்கையோடு போராடு…
நாளைய விடியல்
உன் கையோடு.

**நா.சுவேதா**
வணிகவியல்துறை முதலாமாண்டு

## சிட்டுக்குருவி

சிட்டுக்குருவி காற்றைத்தான்
சுவாசிக்கின்றன
கதிர்வீச்சை அல்ல!
தொலைபேசிக் கம்பங்களின் கதிர்வீச்சு
தொலைந்து போனது குருவிகளின்
உயிர் மூச்சு!
மனித நேயத்தை பற்றியே
தெரியாதவர்களுக்கு
உயிர்நேயத்தைப் பற்றி எங்கே
தெரியப்போகிறது?
குருவி உடம்பிலே இல்லை காயம்,
இருந்தாலும்
அதன் இறப்பிலே என்ன நியாயம்
காரணம் கதிவிச்சு!
போனது குருவியின் மூச்சு
நம்மிடம் இல்லாதது – மனிதநேயம்
இருந்தாலும் தெரியாது – உயிர்நேயம்

**ப. பிரியதர்ஷணி,**
தமிழ் இலக்கியம் முதலாமாண்டு

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு வாகனம்
விபத்தும் நேரலாம்
பயமின்றி பயணம் செய்!
வாழ்க்கை ஒரு சுற்றுலாத் தலம்
வழிமாற நேரலாம்
உற்சாகமாய் உலா செல்!
வாழ்க்கை என்பது வங்கி போல
நாம் என்ன போடுகிறோமொ அதுதான்
நமக்கு கிடைக்கும்!
வாழ்க்கை ஒரு கோவில்
இடிக்கவும் படலாம்
சலமின்றி வணங்கு!
வாழ்க்கை ஒரு இயந்திரம்
பழுதாகிப் போகலாம்
பக்குவமாய் பணிசெய்!
வாழ்க்கை ஒரு பஞ்சுமெத்தை
திகில் நிறை கனவும் வரும்
பதறாமல் உறங்கு!!

**மோ.கனிமொழி**
ஆங்கிலத்துறை முதலாமாண்டு

## நட்பு

நீ யாருக்காகவும் கண்ணீர்
சிந்தாதே!
உன் கண்ணீருக்கு
தகுதியானவர்கள்
உன்னை அழ விட
மாட்டர்கள்!

**பி.எஸ்.பூபதிராஜா**
முதலாமாண்டு வணிகவியல்

## நண்பனின் பெருமை

அடே அன்பு பித்தா!
கவிதை வேண்டுமா?
நீ என் நண்பனடா
இது போதாதா உனக்கு!
உன்னை போன்ற நண்பனின்
பெருமையை கவிதையாய் பாட
கண்ணதாசனால் ஆகுமோ?

**பி.எ.அமரபாலாஜி**
முதலாமாண்டு வணிகவியல்

## அம்மா

கல்வியைக் காட்டும் ஆசிரியர்
நல்வழியை காட்டும் தந்தை
பாசத்தை காட்டும் சகோதரி
இவை அனைத்தும் அனுபவிப்பதற்கு
என்னைப் பெற்றெடுத்த தாயே
நீதானோ எனக்கு கிடைத்த வரம்!

**ஜெ.புவனேஸ்வரி**
முதலாமாண்டு வணிகவியல்

## கனவு

கனவுகள் நினைவுகளாக
மலரும் என விரும்பினேன் - ஆனால்
என் கனவுகள்
கண்ணீராக கரைவதேனோ?

**சி.சரண்யா**
தமிழிலக்கியம் முதலாமாண்டு

## அவள் பெயர்

அழகான வார்த்தைகளின்
உருவாக்கமே கவிதை என்கிறார்கள்!
பிறகு ஏன் உன் பெயர்
கவிதை தொகுப்பில்
இடம்பெறவில்லை...!

**சி.சரண்யா**
தமிழிலக்கியம் முதலாமாண்டு

## அப்பா

என் அழகுக்கு உருவம் தந்த
தெய்வம் நீவீரே!
நான் நடை பழகியபோது
மகிழ்ந்து சிரித்தாயே!
என் வாழ்க்கைக்கு
வழிகாட்டியாய் இருந்தீரே!
எனது ஆசைகளை நிறைவேற்ற
தங்கள் ஆசைகளை தகர்தீரே!
கனவுகள் களைந்து போகலாம் -ஆனால்
உங்கள் நினைவுகள் அழியாது..!

**ம.குமரேசன்**
உயிர்த்தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

# சிறுகதை

## காலம் யாருக்காகவும் காத்திருக்காது

ஒரு அழகிய கிராமத்தில் சதீஸ் என்ற சிறுவன் தினமும் ஆப்பிள் மரத்தோடு விளையாடுவான். சில நாட்கள் போக, சதீஸ் விளையாட வருவதில்லை. அந்த மரமும் தினமும் அந்த சிறுவன் சதீஸை எதிர்பார்த்தது. ஒரு நாள் சதீஸ் வந்தான். மரம் வா விளையாடலாம் என்றது ஆனால் அவன் ‘‘எனக்கு பணம் தேவைப்படுகிறது என்னால் விளையாட முடியாது’’ என்று கூறினான். அந்த மரம் உடனே என் மரத்தில் உள்ள பழங்களை பறித்து கொண்டு போய் விற்று பணம் செய்து கொள் என்றது. அவனும் பழங்களைப் பறித்துக்கொண்டு சென்று விட்டான். பின் சில நாள் களித்து வந்தான். அப்போது வா விளையாடலாம் என்று அவன் அழைத்தான். ஆனால் அந்த மரம் ‘‘என்னால் இனி விளையாட முடியாது எனக்கு வயது ஆகி விட்டது’’ என்றது. எனவே இக்கதையின் மூலம் நான் அறிய வருவது காலம் யாருக்காகவும் காத்திருக்காது.

**குமுதவள்ளி**

ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## பொருமைக்குக் கிடைத்தப் பரிசு

ஒரு ஊரில் கடுமையான பஞ்சம் நிலவியது. மக்கள் உணவுப் பற்றாக்குறையால் தவித்தனர். ஊரில் உள்ள செல்வந்தர் ஒருவர் அங்குள்ள குழந்தைகளுக்கு ஒருவேளை மட்டும் ரொட்டித் துண்டுகளை இலவசமாக வழங்கினார். அந்தக் குழந்தைகள் போட்டிப்போட்டுக் கொண்டு ரொட்டிகளை எடுத்தனர். ஆனால் ஒரு சிறுமி மட்டும் பொறுமையாய் நின்று கொண்டு எஞ்சிய ரொட்டிகளை வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். இவ்வாறாக சில நாட்கள் சென்றது இதையெல்லாம் செல்வந்தர் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் அந்தச் சிறுமியை அழைத்து ஒரு பெரிய ரொட்டியைத் தந்தார். சிறுமி அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று பார்த்தபோது, அதில் ஒரு தங்கத்துண்டு இருந்தது. சிறுமியின் தாய் அதைத் திருப்பிக் கொடுக்குமாறு சொன்னார். ஆந்தச் சிறுமி தங்கத்தை எடுத்துக் கொண்டு செல்வந்தரிடம் தந்தாள். அதற்கு அவர் இந்தத் தங்கம் உன் பொறுமைக்கு நான் கொடுத்தப் பரிசு என்றார். சிறுமி அதை மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு எடுத்துச் சென்றாள்.

**சி.பிரேம்குமார்**

I BSC MB

## நீதி

ஒரு ஊரில் சரவணன் என்னும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் இருந்தான். அவன் நல்ல பண்பு நலன்களையும் மற்றவர்களிடம் கருணையும் கொண்டிருந்தான். அவனுக்கு சொந்தம் என்று சொல்ல அம்மா மட்டுமே உள்ளார். அன்று ஒரு நாள் அவன் வேலைக்கு சென்று கொண்டிருக்கும் பொழுது வழியில் ஏழைச்சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் வயிற்றுப் பசிக்காக தெருவில் பிச்சை எடுத்துக்கொண்டிருந் தார்கள் கூடவே அவர் பெற்றோரும் இருந்தனர். சிறுவர்களும் பிச்சையெடுக்க மறுக்கவே அவர் பெற்றோர் வற்புறுத்தி அடித்து அச்செயலை செய்யத் தூண்டினர்.

இதை வழியில் கண்ட சரவணன் அவர் பெற்றோரிடம் படிப்பின் அவசியம் மற்றும் பள்ளிக்கூடத்தின் மதிய உணவு ஆகியவற்றைக் கூறி கூடவே அவர்கள் படிப்புச் செலவுக்காக மாதம் 500 ரூபாய் தருவதாகவும் கூறி அவர்கள் இரு குழந்தைகளையும் படிப்பதற்கு சம்மதம் வாங்கி அவர்களை அரசு பள்ளிக்கூடத்தில் சேர்த்தான்.

சில மாதங்கள் சென்ற பிறகு அவனது தாய் உடல் நிலை பாதிக்கப்பட்டது. அப்பொழுது அவனது கையில் போதிய பணமும் இல்லை. பல இடங்களில் கேட்டும் கிடைக்கவில்லை. அந்த சமயம் அந்தச் சிறுவர்கள் வந்தனர். ஆனால் அந்த நிமிடம் சரவணனின் தாய் உடல்நிலை சரியில்லை என்றுஅந்த சிறுவர்களுக்குத் தெரியாது.

அந்த சிறுவர்கள் வந்த விஷயம் படிப்புச் செலவுக்காக அல்ல அந்த சிறுவர்கள் கபடி போட்டியில் கலந்து ரூபாய் 5000 பரிசுத் தொகை பெற்றனர். அந்ததொகையை அவரிடம் கொடுக்கவே வந்தனர். அவரின் தாய் உடல் நிலை விவரம் அறிந்ததும் மிகவும் வருத்தத்துடன் மற்றும் மிகவும் சந்தோசத்துடன்அந்த பரிசுத்தொகையை கொடுத்தார்கள்.அதை பெற்றுக் கொண்ட சரவணனும் அவர்களிடம் நன்றி தெரிவித்தான்.

**பா.தீபிகா**

முதலாமாண்டு வணிக மேலாண்மை

## கட்டுரை

### சாதாரண கணினியை தொடுதிரை கணினியாக்க..

சாதாரண கணினிகளை தொடுதிரை கணினியாக மாற்றிப் பயன்படுத்த ஒரு இணைப்புக் கருவி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இன்று எலக்ட்ரானிக் கருவிகள் எல்லாம் தொடுதிரை வசதியுடன் கூடிய ஸ்மார்ட்

வடிவங்களுக்கு மாறி உள்ளன. வரப்போகும் விண்டோஸ் 10 தொடுதிரை கணினிக்கேற்ப பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் பல வசதிகளும் தொடுதிரை கருவிகளில் வழங்கப்படுகின்றன.

ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள சாதாரண கணினிகளை தொடுதிரை கணினியாக மாற்றவும், தொடுதிரை கருவிகளில் பெறவும் புதிய சாதனம் ஒன்று வெளி வந்துள்ளது. “டீயோபேட்” எனப்படும் இது “ஐ பேடு” அளவிலான கருவியாகும். இதில் இணைக்கப் பட்டிருக்கும் ஐ ஆர் கேமரா தொடுதிரை வசதிக்கு பெரிதும் உதவுகிறது,

மவுஸ் கருவி போல இந்த அட்டையில் நாம் தொடுதல், இழுத்தல், தட்டுதல் மூலம் செய்யும் செயல்கள் கேமராவின் மூலம் ஸ்கேன் செய்யப்பட்டு கணினிக்குக் கடத்தப்படுகிறது. கேமராவில் பதிவு செய்யப்படும் கை உருவம் கணினியில் திரையில் மங்களான படம் போல் தெரிவதால் நாம் சரியாக எதை தொட்டு இயக்குகிறோம் என்பதை அறியமுடியும். “மவுஸ்” மற்றும் “கீ போர்டு” களை பயன்படுத்தும் வேலையையும் இந்தக் கருவி மிச்சப்படுத்துகிறது.

“இண்டியகோகோ” நிறுவனத்துடன் இணைந்து இந்தகருவியை விற்பனைக்கு கொண்டு வரும் முயற்சிகள் நடக்கிறது. விரைவில் அமெரிக்காவில் விற்பனைக்கு வரும் இது டிசம்பர் 2015 முதல் உலக நாடுகளில் விற்பனைக்கு கிடைக்கும்.

**அ.மதன்ராஜ்**

கணினி அறிவியல் அ'பிரிவு முதலாமாண்டு

# பொது அறிவு

## International Day of the February

**4 February**

World Cancer Day

**6 February**

International Day of Zero Tolerance to Female Genital Mutilation

**13 February**

World Radio Day [UNESCO]

**20 February**

World Day of Social Justice

**21February**

International Mother Language Day

## மாசி மாதச் சிறப்புகள்

! மகாவிஸ்ணுவாக அவதாரம் எடுத்தது மாசி மாதத்திருநாளில்தான்.

! மாசி மாதத்தன்றுதான் பார்வதிதேவி காளிந்தி நதியில் ஒரு தாமரை மலரில் வலம்புரிச் சங்காகத் தோன்றினாள்.

! சிவபெருமான் பல திருவிளையாடல்கள் புரிந்தது மாசி மாதத்தில்.

! மந்திர உபதேசம் பெறுவது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

! குலசேகர் ஆழ்வார் மாசி மாதம் புணர்பூச நட்சத்திர நாளில் அவதரித்தார்

! மாசி மாத பூச நட்சத்திரம் தினத்தன்றுதான் முருகப்பெருமான் சுவாமிமலையில் தன் தந்தை சிவபெருமானுக்கு உபதேசம் செய்தார்

! மாசி மாதத்து சங்கடஹர சதுர்த்தி மிக விசேஷம் அந்நாளில் விரதம் இருப்பவர்கள் எல்லாவித தோஷங்களிலிருந்தும் விடுபடுவர்.

! அகத்தினர் தம் விருப்பங்கள் நிறைவேற தவம் இருந்து அருள் பெற்றது மாசி மாதத்தில்தான்.

**மு.சாந்தி**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## விலங்குகளின் கருவளர்ச்சி நாட்கள்

» யானை – 22 மாதங்கள்

» சிங்கம் - 110 நாட்கள்

» புலி – 112 நாட்கள்

» கரடி – 8 மாதங்கள்

» குரங்கு – 5-7 மாதங்கள்

» ஒட்டகம் - 13 மாதங்கள்

» மான் - 180 நாட்கள்

» கங்காரு – 21-38 நாட்கள்

» பூனை – 8 வாரங்கள்

» காண்டாமிருகம் - 15 மாதங்கள்

» ஒட்டகச்சிவிங்கி – 13-15 மாதங்கள்

» குதிரை – 11 மாதங்கள்

» முள்ளம்பன்றி – 110 நாட்கள்

» சிறுத்தை – 90-95 நாட்கள்

» மாடு – 9 மாதங்கள்

» ஆடு – 145-155 நாட்கள்

» முயல் - 28-35 நாட்கள்

» நாய் - 58-63 நாட்கள்

» அணில் - 5-6 வாரங்கள்

» எலி – 21-23 நாட்கள்

**சே.உதயசங்கரி**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## Blood Group = Person's Qualities

**A1 + ve** = Good Leadership Quality

**A-**= Hard Working Persons

**B+** = Can Give Up For Others

**B-**= Lazy persons

**O+** = The Persons are born to help others by nature

**O-** = The Persons are born to help others by nature

**AB+** = Very difficult to understand them

**AB-** = Very difficult to understand them

**ப.கௌசல்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## புகழ்பெற்ற குதிரைகள்

» புத்தரின் குதிரை – கண்டகம்

» ஷாஜஹானின் குதிரை – பீம்பு

» ராஜா தேசிங்குவின் குதிரை – பஞ்ச கல்யாணி

» நெப்போலியன் குதிரை– புஸியாலஸ்

» நாணா பிரதாப் சிங்கின் குதிரை – சீட்டக்

» வள்ளல் காரியன் குதிரை – காரி

» எலிசபெத் ராணியின் குதிரை – வின்ஸ்டன்

**ப.கௌசல்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பழந்தமிழர் விளையாட்டுகள்

➢ **சிறுவர் விளையாட்டு**

பம்பரம், கிளித்தட்டு, உப்பு விளையாட்டு, கள்ளன் காவலன், கோலி, கிட்டிப்புள், காற்றாடி, பந்து விளையாட்டு, ஒற்றையா இரட்டையா, நீச்சல்

> **சிறுமியர் விளையாட்டு**

பூப்பறித்தல், கரகரவண்டி, காட்டாங்கல், பல்லாங்குழி, ஊஞ்சல், தாயம்

> **ஆடவர் விளையாட்டு**

மல்லாடல், ஏறுதழுவுதல், வேட்டையாடுதல், நீரில் மூழ்கி மணல் எடுத்தல்

➢ **பெண்கள் விளையாட்டு**

வட்டாடுதல், கழங்கு, அம்மானை, பந்தாடுதல், ஊஞ்சல், ஓரையாடுதல்

➢ **சிறுவர்**

சிறுதேர் உருட்டி விளையாடி மகிழ்ந்தனர்.

➢ **சிறுமியர்**

முத்துக்களை கிளிஞ்சல்களின் உள்ளே இட்டு ஆட்டிக் களிப்புற்றனர்.

**ஜி.தேன்மொழி**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## தமிழ் நாட்டு ஊர்களும் சிறப்புகளும்

**சாப்பாடு**

» காரைக்குடி – ஆட்டு இறைச்சியை உலர்த்தி செய்த அசைவ உணவு

» குற்றாலம் - நாட்டுக்கோழி சுக்கா

» துக்கோட்டை – சிறுமீன்

» இராமேசுவரம் - மாசிக்கருவாடு

» வேலூர், நாமக்கல் - வாத்துக்கறி

» மதுரை - இட்லி

» விருதுநகர் – புரோட்டா

» திண்டுக்கல் - தலப்பாகட்டு பிரியாணி

**பழங்கள்**

» சத்தியமங்கலம் - வாழைப்பழம்

» சிறுமலை – மலை வாழை

» கொடைக்கானல் - பேரிக்காய்

» நெய்வேலி – முந்திரி

» பண்ருட்டி – பலாப்பழம்

**காய்கறி**

» ஊட்டி – உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு

» அரவக்குறிச்சி – முருங்கை

» ஒட்டன்சத்திரம் - கத்தரிக்காய்

» கும்பகோணம் - வெற்றிலை

» பொள்ளாச்சி, கோட்டாறு – தேங்காய்

» கொல்லிமலை – அன்னாசி

» தேனி – கரும்பு

**இனிப்பு வகைகள்**

» காரைக்குடி – குலோப்ஜாமுன்

» கோவில்பட்டி – கடலை முட்டாய்

» சாத்தான் குளம் - மஸ்கோத் அல்வா

» தூத்துக்குடி – மக்ரூன் (முந்திரி, முட்டை கலந்து செய்தல்)

» திருச்செந்தூர் – சில்லுக்கருப்பட்டி

**பானங்கள்**

» மதுரை – ஜிகர்தண்டா

**நொறுக்குத்தீனி**

» கல்லிடைக்குறிச்சி – அப்பளம்

» அருப்புக்கோட்டை – காரச்சேவு (கடலை மாவால் செய்யப்படுவது)

» காரைக்குடி – அச்சு முறுக்கு

» மணப்பாறை – முறுக்கு

**பிரசாதம்**

» காஞ்சிபுரம் - இட்லி

» திருச்செந்தூர் – சில்லுக்கருப்பட்டி

» அழகர் கோவில் - அக்காரவடிசல் என்னும் அரிசியால் செய்த பொங்கல்

» திருப்பெருந்துறை(ஆவுடையார் கோவில்) – பாகற்காய்சாதம்

**நா.சரண்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சின்னச்சின்ன கேள்விகள்

1.இந்தியாவில் சமீபத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலம் எது?
தெலுங்கானா

2.சூரியனின் உண்மையான நிறம் எது?
வெள்ளை

3.சமீபத்தில் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழி எது?
மராத்தி

4.பின்னங்காளில் மரத்தில் ஏறக்கூடிய விலங்கு எது?
ஸ்காட்

5.செய்தித்தாளை முதன் முதலில் தொடர்ச்சியாக வெளியிட்ட நாடு எது? ஆலந்து

**ஜெ.மஞ்சுளாதேவி**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## தேசத்தலைவர்கள் சமாதியின் பெயர்கள்

- மகாத்மாகாந்தி – ராஜ்காட்
- ஜவகர்லால் நேரு – சரந்திவனம்
- பி.ஆர்.அம்பேத்கர் – சைத்திரபூமி
- இந்திராகாந்தி – சக்கிஸ்தம்
- சரண்கிங் - கிசான்காட்
- ஜெயில்சிங் - ஏக்தாஸ்தலம்
- ராஜீவ்காந்தி – வீரபூமி

- மொரார்ஜிதேசாய் - அபய்காட்
- இல்சாரிலால்நந்தா – நாராயண்காட்
- இகஜீவல்ராம் - மேதாஸ்தலம்
- லால்பகதூர்சாஸ்திரி – விஜம்காட்

**எஸ்.கௌசல்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## இந்திய மாநில விலங்குகள்

தமிழ்நாடு – வரையாடு

கர்நாடகா – யானை

ஆந்திரா – கறுப்பு மான்

அசாம்- ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம்

குஜராத் - சிங்கம்

உத்தரகாண்டம் - கஸ்தூரி மான்

மராட்டியம் - மலை அணில்

சிக்கிம் - சிவப்பு பாண்டா

ஜம்மு காஷ்மீர் - ஹம்குல்

ஒடிசா – சாம்பார் மான்

பீகார் – காட்டெருமை

டெல்லி – புளுபுல்

**அ.பிரவினா**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பொன்மொழிகள்

**சாக்ரடீஸ்**

நட்பை பெறுவதில் நிதானமாக இரு; பெற்ற பின் உறுதியுடன் நீடித்து நட்பைக் காப்பாற்று.

**கோல்டுஸ்மித்**

அதிர்ஷ்டம் எப்போதும் சுறுசுறுப்பை தொடர்ந்தே செல்லும்.

**எச்.டபுள்யூ.ஷா.**

அதிகம் சொல்ல விரும்புபவன் குறைவான வார்த்தைகளையே பயன்படுத்துவான்.

**நார்மன் வின்சென்ட் பீல்**

ஒருபோதும் வறுமையைப் பற்றி சிந்திக்காதீர்கள்; வளமையைப் பற்றியே சிந்தியுங்கள்.

**சாணக்கியர்**

பயமும்,நடுக்கமும் உள்ளவனை தோல்வி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

**எமர்சன்**

அறிவுள்ளவனுக்கு வாழ்க்கை ஒரு திருவிழா.

**மகாத்மாகாந்தி**

பொய் சொல்வது என்பது என்னால் முடியாத செயல்; இந்தக் குணமே பல சந்தர்ப்பங்களில்
என்னை படுகுழியில் விழாமல் காத்தது.

**ச.விஜயசாந்தி**

பி.சி.எ முதலாமாண்டு

## நகைச்சுவை

1.வாழைப்பழ வியாபாரியோட பையன் எப்படி இருப்பான்?

அப்படியே அப்பனையே உரிச்சு வச்சிருப்பான்

2. வீட்டு வாடகையை எப்போ தர்றதா உத்தேசம்? “சம்பளம் கைக்கு வந்ததும்”, சம்பளம் எப்போ கைக்கு

வரும்? "லூசு மாதிரி கேக்காதீங்க வேலைக்கே இன்னும் போகலை எந்த மடையன் சம்பளம் தருவான்.

3.அடிக்கடி திருடிட்டு என் முன்னாடி வந்து நிக்கிறியே, உன் மனசுல என்னதான் நினைச்சுகிட்டு இருக்க? ஒரு நாற்காலிபோட்டா நிக்காம சௌகரியமா உட்கார்ந்துக்கலாம்னு தான் எசமான்!

4.பாடம் எல்லாம் முடிஞ்சிப் போச்சு. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க, எதுவா, இருந்தாலும் தயங்காமக் கேளுங்க, "சார் உங்க பொண்ணு பேரு என்ன சார்?"

**எம்.கீர்த்தனா.**

இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் ஈ பிரிவு

## விடுகதைகள்

◉ ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக்கை அது என்ன? குடை

◉ நாக்குஇல்லாதவன் நல்லது செய்வான் அவன் யார்? புத்தகம்

◉ போன ரயில் திரும்ப வராது அது என்ன? உயிர்

◉ உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்? எறும்பு

◉ அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும் அது என்ன? சாம்பிராணி

◉ அச்சு இல்லாத சக்கரம் அழகு இல்லாத சக்கரம் அது என்ன?வளையல்

◉ கடலிலே கலந்து கரையிலே பிரிந்து தெருவிலே திரியும் அது என்ன? உப்பு

**ச.தமிழ்ச்செல்வி**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மருத்துவக் குறிப்பு

**<u>மாதுளையின் மருத்துவ குணங்கள்</u>**

- பசியைத் தூண்டவும் இருமலைப் போக்கவும்
- மாதுளம் மொட்டுகளை சேகரித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து அதனை வேளைக்கு ஒரு சிட்டிகை எடுத்து வெந்நீருடன் பருகினால் இருமல் நீங்கிவிடும்.
- மாதுளம் பூவை லோசாக தட்டி சாறு எடுக்கவும், அதனுடன் சமஅளவு அருகம்புல் சாறு கலந்து மூன்று வேளை குடித்து வர உடனடி பலன் கிடைக்கும்.
- மாதுளம் பூக்களை மைய அரைத்து அத்துடன் இரண்டு மடங்கு நீர் விட்டுக் காய்ச்சவும். கொதி வந்ததும். இறக்கி வடிகட்டி அத்துடன் சிறிது, தேன், எழுமிச்சம்பழச்சாறு சேர்த்து வாயில் ஊற்றிக் கொப்பளித்து தொண்டைக்குள் மெதுவாக

விழுங்க வேண்டும். இதனால் தொண்டைக் கரகரப்பு குணமடையும்.

**தாதுபலம்**

- தினமும் காலையில் நான்கு மாதுளம்பழம் பூக்களை மென்று தின்று பால் குடித்து வர ரத்தம் சுத்தமடையும்.
- மாதுளம் பூவை பசும்பாலில் வேகவைத்து சிறிது தேன் கலந்து அருந்தினால் நரம்புகள் வலிமை பெறும். நரம்புத் தளர்ச்சி நீங்கும். தாதுபலம் பெறும்.

**கொழுப்பைக் குறைக்கும் கத்திரிக்காய்**

- கத்திரிக்காய் உடல் வலியைப் போக்கும் தன்மை உடையது. காய்ச்சலைப் போக்கக் கூடியது. சோர்வைப் போக்கக் கூடியது. வீக்கத்தைத் தணிக்கக் கூடியது. கொழுப்பைக் குறைக்கக் கூடியது. ரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடியது. ரத்த அணுக்கள் சேர்க்கையைத் தடுக்கக் கூடியது. கண்களின் இரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடியது. மத்திய நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்த வல்லது. ஒவ்வாமையால் ஏற்படும் மயக்க நிலையைத் தடுக்க வல்லது. உறுப்புகளைத் தூண்ட வல்லது. 100 கிராம் கத்திரிக்காயில் 24 கலோரி மட்டுமே ஊட்டச்சத்து அடங்கி இருப்பதால் உடல் எடை கூடாமல் பார்த்துக் கொள்ள உதவுவதோடு ரத்தத்தில் சேர்ந்துள்ள அதிகப்படியான கொழுப்புச் சத்தைக் குறைக்கவும் இது மிக உறுதியாக உள்ளது.

- புத்துணர்வைத் தரும்
- கத்திரிக்காயில் தோலில் உள்ள ஆண்த்தோ சயனின் எனும் வேதிப் பொருள் உடலின் சோர்வைப் போக்கி புத்துணர்வை தரக் கூடியது. அது மட்டுமன்றி ஆன்தோ சையனின் புற்றுநோய் எனப்படும்.கேன்சர் ் செல்களுக்கு எதிராகச் செயல்பட்டு தடுக்க வல்லது. கத்திரி இலைகள் ஆஸ்த்துமா எனப்படும் இறைப்பு நோய், மூச்சுக் குழல் நோய்கள் சுவாச அறைகோளாறுகள் ஆகியவற்றை குணப்படுத்தும்.
- நோய்களை குணமாக்கும் பூக்கள்
- தாழம்பூ சர்பத் செய்து மாதம் இருமுறை சாப்பிட அம்மை நோய் வராமல் தடுக்கலாம். ரோஜா இதழ்களை அப்படியே சாப்பிட்டால் வாய்ப்புண்

குணமாகும். சுறுசுறுப்பாகவும் இருக்கலாம்.

- ஒத்த நந்தியாவட்டையை கண்களின் மீது வைத்து வந்தால் கண் எரிச்சல் குணமாகும்.

குளிர்ச்சியடையும்.

மருதோன்றி பூவை இரண்டு நாள் இரவில் சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும். தாமரை இதழை தினமும் ஒன்று சாப்பிட்டால் பேசும்திறன் அதிகரிக்கும். ஆவாரம் பூவை பாலில் கலந்து கொதிக்க வைத்து சாப்பிட்டு வர உடலுக்கு பலம் கூடும். வில்வப் பூக்களை புளி சேர்த்து ரசம் வைத்துச் சாப்பிட்டு வர குடல் வலிமை பெறும்.

**கருவேப்பிலை**

- சாதாரண தலைவலிக்கு சுக்கைத் தண்ணீர்விட்டு அரைத்து வலிக்கும் இடத்தில் பற்றுப் போட்டால் நீங்கும். சுரத்தின் போது ஏற்படும் கடுமையான தலைவலிக்கு கடுகை அரைத்து உள்ளங்காலில் பற்றுப்போட்டால் குணமாகும்.
- சாதாரண பல்வலிக்கு ஒரு துண்டு சுக்கை வாயில் போட்டு அடக்கிக் கொண்டாலே போதும் வலி அதிகமாக இருந்தால் கடுகை அரைத்துப் பல்வலி இருக்கும் பக்கம் கன்னத்தின் மேல பொடி செய்து பற்று போட்டால் குணமாகும்.

**எலுமிச்சை சாறு**

- எலுமிச்சை சாற்றை அருந்தினால் பித்த மயக்கம், வாந்தி கண்ணோய், இரத்த சோகையால் ஏற்பட்ட சோர்வு முதலியவை நீங்கும். உடலுக்கு புத்துணர்வை தரும். நன்கு பசியைத் தூண்டும். தாகத்தை தணிக்கும். எலுமிச்சம் சாற்றைத் தலையில் தேய்த்து குளித்து வந்தால் மனநோய், மனஅழுத்தம் நீங்கும். உடலில் தேய்த்து குளித்தால் தோல் சம்பந்தப்பட்ட சில வியாதிகள் குணமடையும். நகச்சுற்றுக்கு இதன் சாறே சிறந்த மருந்து. யானைக்கால் வியாதி, கண்ணோய், காது வலிக்கும் எலுமிச்சை சாறு சிறந்த மருந்து.

**பொன்னாங்கண்ணிச் சாறு**

- பொன்னாங்கண்ணி பல வகையான தைல வர்க்கத்தில் அதிகம் உபயோகப் படுத்தப்படுகிறது. இந்தப் பொன்னாங்கண்ணி கீரையை சூப் செய்து காலை

மாலை இருவேளை என 15 நாட்களுக்கு அருந்தி வந்தால் கண் நோய்கள் ஏதும் அண்டாது. உடலின் வெப்பத்தைக் குறைத்து உடலுக்குப் புத்துணர்வை கொடுக்கும்.

**அருகம்புல் சாறு**

- அருகம்புல் சாறானது இரத்தத்தை சுத்தப்படுத்துவதுடன் உடலுக்கும் புத்துணர்வை கொடுக்கிறது. உடலில் தேங்கியுள்ள அசுத்த நீர் அனைத்தையும் வெளியேற்றுகிறது.

**கு.பந்தலராஜன்,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல் ஆ-பிரிவு

-------------------------- ---------------- -------------------

>பொன்னாங்கண்ணி இலையை காலையில் மென்று தின்று பால் பருகிவர கண்பார்வை தெளிவு பெரும்

> சாப்பிட குடலில் சிக்கியிருக்கும் முடி, நஞ்சு ஆகியவை வெளியேறும்

> நெல்லிக்காய் சாறு பிழிந்து ஒவ்வொரு ஸ்பூன் இரு வேளை குழந்தைகளுக்கு கொடுத்துவர கண் சூடு குறையும்

>பிரமதண்டு இலைச்சாறு பால் துளி கண்ணில் விடுவது கண்ணில் சதை வளருவதைத் தடுக்கும்

> செவ்வாழைப்பழத்தை கண்ணாடி குத்திய இடத்தில் வைத்துக் கட்டினால் ரத்தப்போக்கு நின்று விரைவில் குணமாகும்.

> இஞ்சி சாறு, எலுமிச்சைச் சாறு, தேன் கலந்து சாப்பிட மார்புவலி நிற்கும். பூண்டு, கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர இடுப்பு வலி குணமாகும்.

> வில்வ இலையைத் தினமும் காலையில் மென்று தின்று வர வாய் திக்குதல் சரியாகும்.

**கே.அமுதா**
உயிரித் தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

## பொன்மொழிகள்


- கொடிய பாவம் செய்தவர்கள் பேய்பிசாசுகளாக இருந்தேயாக வேண்டும். அந்த பாவ பலன் தீர்ந்தவுடன் அவர்கள் செய்த சிறிதளவு புண்ணியம் அவர்களை மறுபடியும் மனிதர்களாகப் பிறக்க வைக்கிறது.
- உங்கள் உடம்புக்கு மரணம் உண்டு ஆனால் உங்களுக்கு ஒரு போதும் மரணம் இல்லை.
- கடுமையான கஞ்சத்தனம் தகுதியற்ற பேராசை இவை மூன்றும் மனிதனை நாசமாக்கி விடும்.
- சாகும்வரை வேலை செய்யுங்கள் நான் உங்களுடன் உள்ளேன். நான் போன பிறகு என் ஆன்மா உங்களுடன் வேலை செய்யும்.

**பா.சபிதா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# ஒளிநிழல் படம்

கவிபாடும் காட்சிகள் – த.சுந்தரராஜ்





# ஓவியம்










மு. ஜமாஸிஜபா
உயிர்தொழில்நுட்பவியல் – 'அ'





Art By.
P. Vigneshwaran.
With Frame.


S. Hariharan.
II- BSc-[cs]-'D'.


Art
by
V.Ragavi
II BA Tamil


S.USHA
II-BA TAMIL


வே. தீபிகா
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு